සියලුම හිමිකම් ඇවිරිණි/ முழுப் பதிப்புரிமையுடையது / All Rights reserved

මධ්‍යම පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
மத்திய மாகாண கல்வித் திணைக்களம்
Department of Education Central Province

தரம் : 10
10 ශ්‍රේණිය

ஆண்டிறுதிப் பரீட்சை - 2019

65 T I

இரண்டாம் மொழி - தமிழ் I, II
දෙවන බස - දෙමළ I, II

நேரம் : 3 மணித்தியாலம்
කාලය : පැය තුනයි

# (65) இரண்டாம் மொழி - தமிழ்
## வினாத்தாள் I

**கவனிக்க :**
- **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.
- **1** தொடக்கம் **40** வரையுள்ள வினா ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப்பொருத்தமான** விடையைத் தெரிவு செய்க.
- **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (X) இடுக.**

සැලකිය යුතුයි :
- සියලු ම ප්‍රශ්නවලට පිළිතුරු සපයන්න.
- අංක 1 සිට 40 තෙක් ප්‍රශ්නවල, දී ඇති (1), (2), (3), (4) පිළිතුරුවලින් නිවැරදි හෝ වඩාත් ගැළපෙන හෝ පිළිතුර තෝරා ගන්න.
- ඔබට සැපයෙන උත්තර පත්‍රයේ එක් එක් ප්‍රශ්නය සඳහා දී ඇති කව අතුරෙන්, ඔබ තෝරා ගත් පිළිතුරෙහි අංකයට සැසඳෙන කවය තුළ (X) ලකුණ යොදන්න.

**Note :**
- Answer **all** questions.
- In each of the questions from **1** to **40**, pick one of the alternatives (1), (2), (3), (4) which is **correct** or **most appropriate.**
- **Mark a cross (x) on the number corresponding to your choice in the answer sheet.**

✷ **1** தொடக்கம் **5** வரையுள்ள வினாக்களில் தடித்த எழுத்தில் உள்ள சொல்லின் **ஒத்தகருத்துள்ள சொல்லைத்** தெரிவு செய்க.
1 සිට 5 තෙක් ප්‍රශ්නවල තද කළු අකුරුවලින් ඇති පදයට **සමාන පදය** තෝරන්න.
In questions **1 to 5**, select the **synonyms** for the words in bold print.

01) பாலெடுத்துப் பொங்கலுக்குப் பானை வைப்பார் **அப்பா**
1) தங்கை 2) தந்தை 3) மாதா 4) அன்னை

02) **அரசன்** மந்திரிகளுடன் ஆலோசனை செய்தான்.
1) வீரன் 2) தலைவி 3) மைந்தன் 4) மன்னன்

03) எல்லோருடைய முகங்களிலும் **மகிழ்ச்சி** காணப்பட்டது.
1) சந்தோஷம் 2) சந்தேகம் 3) துன்பம் 4) கவர்ச்சி

04) **மலர்** கொண்டு வந்தாள்,
1) மாலை 2) மணி 3) பூ 4) இலை

05) மாமாவின் **வீடு** எங்கே?
1) இல்லம் 2) பிறப்பிடம் 3) கிராமம் 4) உறவினர்

✷ **6** தொடக்கம் **10** வரையுள்ள வினாக்களில் தடித்த எழுத்தில் உள்ள சொல்லின் **எதிர்க்கருத்துள்ள சொல்லைத்** தெரிவு செய்க.
6 සිට 10 තෙක් ප්‍රශ්නවල තද කළු අකුරුවලින් ඇති පදයට **විරුද්ධ පදය** තෝරන්න.
In questions **6 to 10**, select the **antonyms** for the words in bold print.

06) அந்தத் திருடன் **பொய்** சொன்னான்.
1) கதை 2) புறம் 3) உண்மை 4) கருத்து

07) தலைவர் **நீதி** வழங்கினார்.
1) மரியாதை 2) அவமரியாதை 3) நேர்மை 4) அநீதி

08) **வினா** இலக்கத்தைக் குறிப்பிடுக.
1) வரிசை 2) விடை 3) வகை 4) கேள்வி

09) சாப்பாட்டிற்குப் **பின்** மருந்தை எடுக்கவும்.
1) முன் 2) உடன் 3) அவசரமாக 4) சேர்த்து

10) நீங்கள் **உள்ளே** வாருங்கள்,
1) நேரே 2) எதிரே 3) வழியே 4) வெளியே

✹ **11** தொடக்கம் **13** வரையான வினாக்களில் தடித்த எழுத்தில் உள்ள **பேச்சு வழக்குச் சொல்லுக்கான எழுத்து வழக்குச் சொல்லைத்** தெரிவு செய்க.
11 සිට 13 තෙක් ප්‍රශ්නවල තද කළු අකුරින් දැක්වෙන **කථන බසින්** ඇති පදයට අදාළ **ලිඛිත පදය** තෝරන්න.
In questions **11 to 13**, select the words in **written form for the words in spoken form** given in bold print.

11) ஒரு கிலோ **தாங்க.**
1) தருவார் 2) தாருங்கள் 3) தருவீர்கள் 4) தருவேன்

12) எத்தனை **வயசு**?
1) வருடம் 2) மாதம் 3) வயது 4) வளர்ச்சி

13) கொஞ்சம் **இருங்க**.
1) இருந்தீர்கள் 2) இருங்கள் 3) இருப்பீர்கள் 4) இறங்குங்கள்

✹ **14** தொடக்கம் **16** வரையான வினாக்களிலுள்ள **இடைவெளிகளை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான சொல்லைத்** தெரிவு செய்க.
14 සිට 16 තෙක් ප්‍රශ්නවල **හිස්තැන් පිරවීම සඳහා වඩාත් ම සුදුසු** පදය තෝරන්න.
In questions **14** to **16**, select the most **suitable** words to **fill in the blanks.**

14) நான் நடனம் ஆடினேன்.
............................ நடனம் ஆடுகிறாய்.
1) நீ 2) நீங்கள் 3) நாங்கள் 4) அவர்கள்

15) நீங்கள் விளையாடுவீர்கள்.
............................... விளையாடுவார்கள்.
1) அவன் 2) அவள் 3) அவர்கள் 4) அவை

16) அது மேலே பறந்தது.
.................... மேலே பறந்தன.
1) அவர்கள் 2) அவன் 3) அவள் 4) அவை

✹ **17** தொடக்கம் **19** வரையுள்ள வினாக்களுக்குப் பொருத்தமான **முடிக்கும் சொல்லைத்** தெரிவு செய்க.
17 සිට 19 තෙක් ප්‍රශ්නවලට සුදුසු **අවසාන පදය** තෝරන්න.
In questions **17** to **19**, select the suitable **ending words.**

17) நீங்கள் பாடம் ................................
1) படிக்கின்றான் 2) படிக்கின்றார்கள்
3) படிக்கின்றேன் 4) படிக்கின்றீர்கள்

18) மாமா பயணம் ................................
1) போனார் 2) போனோம்
3) போவேன் 4) போகின்றாள்

19) சந்தையில் வியாபாரிகள் ................................
1) நின்றீர்கள் 2) நின்றனர்
3) நிற்கின்றார் 4) நின்றது

✹ **20** தொடக்கம் **22** வரையான வினாக்களிலுள்ள வாக்கியங்களின் **இடைவெளிகளுக்குப் பொருத்தமான உருபைத்** தெரிவு செய்க.
20 සිට 22 තෙක් ප්‍රශ්නවල ඇති වාක්‍යවල හිස්තැනට **සුදුසු විභක්ති** ප්‍රත්‍යය තෝරන්න.
In questions **20 to 22**, select the **suitable suffixes** to fill in the blanks.

20) ................................ பரிசு கிடைத்தது.
1) தம்பியோடு 2) தம்பிக்கு 3) தம்பியை 4) தம்பியுடன்

21) தாய் ................................ பாலூட்டினாள்.
1) குழந்தையால் 2) குழந்தையுடன் 3) குழந்தைக்குப் 4) குழந்தையுடன்

22) பூனை ................................ பிடித்தது.
1) எலிக்குப் 2) எலியைப் 3) எலியோடு 4) எலியால்

✷ **23** தொடக்கம் **25** வரையான வினாக்களில் ஆரம்பத்தில் தரப்பட்டுள்ள வாக்கியத்தை விடையாகப் பெறக்கூடிய **பொருத்தமான வினாவைத்** தெரிவு செய்க.
23 සිට 25 තෙක් ප්‍රශ්නවල මුලින් දී ඇති වාක්‍යය පිළිතුර වශයෙන් ලබා ගැනීමට **සුදුසු ප්‍රශ්නය** තෝරන්න.
In questions **23** to **25**, select the **suitable questions** to get the sentences given at the **beginning** as the answers.

23) பஸ் வண்டி அருகில் நின்றது.
1) பஸ் வண்டி ஏன் நின்றது? 2) பஸ் வண்டி எவ்வாறு நின்றது?
3) பஸ் வண்டி எங்கு நின்றது? 4) பஸ் வண்டி எப்போது நின்றது?

24) வயல்வெளிகளைக் கடந்து சென்றோம்.
1) எதனைக் கடந்து சென்றீர்கள்? 2) எவ்வாறு கடந்து சென்றீர்கள்?
3) எங்கு கடந்து சென்றீர்கள்? 4) எப்போது கடந்து சென்றீர்கள்?

25) எனக்கு புத்தகம் வேண்டும்.
1) உனக்கு யார் வேண்டும்? 2) உனக்கு எப்படி வேண்டும்?
3) உனக்கு ஏன் வேண்டும்? 4) உனக்கு என்ன வேண்டும்?

✷ **26** மற்றும் **27** ஆகிய வினாக்களில் உள்ள இடைவெளிகளை நிரப்புவதற்கு **மிகப் பொருத்தமான சொல்லைத்** தெரிவு செய்க.
26 හා 27 තෙක් ප්‍රශ්නවල හිස්තැන් සම්පූර්ණ කිරීමට **වඩාත් සුදුසු පදය** තෝරන්න.
For questions **26** and **27**, select the **most suitable words** to fill in the blanks.

26) எலிகளை அழிக்க ................................. வளர்க்க முடிவு செய்தனர்.
1) மரங்களை 2) நாய்களை 3) பூனைகளை 4) கொசுக்களை

27) மேடையில் நாடகம் .................................
1) விழுந்தோம் 2) எழுந்தோம் 3) நடித்தோம் 4) நடந்தோம்

✷ **28** மற்றும் **29** ஆகிய வினாக்களுக்கு **பொருத்தமான அடைமொழிகளைத்** தெரிவு செய்க.
28 හා 29 තෙක් ප්‍රශ්නවලට ගැළපෙන විශේෂණ පදය තෝරන්න.
In questions **28** and **29**, select the **suitable adjective.**

28) நண்பனிடமிருந்து ................................. பிரிந்தேன்.
1) கவலையோடு 2) அழகிய 3) சிவப்பாகப் 4) உயரமாகப்

29) தம்பி ................................. பாடினான்.
1) நீலமாகப் 2) இனிமையாகப் 3) கறுப்பாகப் 4) பழைய

✷ **30** மற்றும் **32** ஆகிய வினாக்களில் ‘அ’ பிரிவில் உள்ள பகுதியை **முடிப்பதற்குப் பொருத்தமான சொல்** ‘ஆ’ பிரிவில் உள்ளது. சொற்களை ஒழுங்குமுறையில் கொண்டமைந்த விடைகளைத் தெரிவு செய்க.
30 හා 32 ප්‍රශ්නවල ‘அ’ යටතේ ඇති කොටසට **ගැළපෙන අවසන් පදය** ‘ஆ’ කොටසේ ඇත. එය නිවැරදි ලෙස ගළපා ඇති වරණය තෝරන්න.
In questions **30** and **32**, the appropriate ending word for the **pharases** in ‘அ’ are given in ‘ஆ’. Select the option that matches the words correctly.

30)

| **‘அ’** | **‘ஆ’** |
|---|---|
| 1. குடிப்பது கூழ் | அ. கடிக்காது. |
| 2. காற்றுள்ள போதே | ஆ. வாய்க்கு எட்டவில்லை. |
| 3. கைக்கு எட்டியது | இ. தூற்றிக்கொள். |
| 4. குரைக்கிற நாய் | ஈ. கொப்பளிப்பது பன்னீர் |

1) அ, ஆ, இ, ஈ 2) ஆ, அ, இ, ஈ 3) இ, ஈ, அ, ஆ 4) ஈ, இ, ஆ, அ

31)

| **‘அ’** | **‘ஆ’** |
|---|---|
| 1. தென்னையின் இளமைப்பெயர் | அ. கீரி |
| 2. முயலின் இளமைப்பெயர் | ஆ. பிள்ளை |
| 3. මුගටියා | இ. அநாதை |
| 4. අනාථ | ஈ. குட்டி |

1) அ, ஆ, இ, ஈ 2) இ, ஈ, அ, ஆ 3) இ, ஈ, ஆ, அ 4) ஆ, ஈ, அ, இ

32)

| **‘அ’** | **‘ஆ’** |
|---|---|
| 1. இளமையிற் கல்வி | அ. குறைவற்ற செல்வம் |
| 2. சிறுதுளி | ஆ. அக்கரைப் பச்சை |
| 3. நோயற்ற வாழ்வே | இ. சிலையில் எழுத்து |
| 4. இக்கரை மாட்டுக்கு | ஈ. பெருவெள்ளம் |

1) இ, ஈ, அ, ஆ 2) அ, ஆ, இ, ஈ 3) ஆ, அ, ஈ, இ 4) ஈ, இ, ஆ, அ

✷ **33** மற்றும் **34** ஆகிய வினாக்கள் ஒவ்வொன்றிலும் முதலிற் கொடுக்கப்பட்டுள்ள (அ), (ஆ) என்னும் இரு வாக்கியங்களும் பொருள் **வேறுபடாதவாறு** தனி வாக்கியமாக இணைக்கப்பட்டுள்ள வாக்கியத்தைத் தெரிவு செய்க.
33 හා 34 ප්‍රශ්නවල මුලින් දී ඇති (அ) සහ (ஆ) වාක්‍ය දෙක අර්ථය **වෙනස් නොවන සේ** තනි වාක්‍යයක් ලෙස නිවැරදිව සම්බන්ධ කර ඇති වාක්‍යය තෝරන්න.
In questions **33** and **34**, select the sentence that combines the two sentences (அ) and (ஆ) correctly **without changing** the meaning.

33) (அ) தம்பி நடந்தான்.
(ஆ) தங்கை நடந்தாள்.

1) தம்பி, தங்கை நடந்தாள்.
2) தம்பியும் தங்கை நடந்தாள்.
3) தம்பியும் தங்கையும் நடந்தார்கள்.
4) தம்பியுடன் தங்கை நடந்தார்கள்.

34) (அ) கிளி பறந்தது.
(ஆ) குருவி பறந்தது.

1) கிளியும் குருவியும் பறந்தன.
2) கிளியுடன் குருவி பறந்தார்கள்.
3) கிளி, குருவி பறந்தாள்.
4) கிளியும் குருவியும் பறந்தான்.

✷ **35** மற்றும் **36** ஆகிய வினாக்களில் தரப்பட்டுள்ள சிங்களச் சொற்களுக்குப் பொருத்தமான **தமிழ்ச் சொல்லைத்** தெரிவு செய்க.
35 හා 36 ප්‍රශ්නවල දී ඇති සිංහල වචනයට ගැළපෙන **දෙමළ වචනය** තෝරන්න.
In questions **35** and **36**, select the **Tamil word** that matches the Sinhala word.

35) ගොවියා 1) கிழவன் 2) உழவன் 3) கொழுத்தவன் 4) கொடுப்பவன்

36) නෙළුම් 1) மல்லிகை 2) ரோஜா 3) அல்லி 4) தாமரை

✷ **37** தொடக்கம் **40** வரையான வினாக்களுக்குச் **சரியான விடையைத்** தெரிவு செய்க.
37 සිට 40 තෙක් ප්‍රශ්නවලට **නිවැරදි පිළිතුර** තෝරන්න.
In questions **37** to **40**, choice the **correct answer** from those given below.

37) **நூற்று நாற்பத்து மூன்று** இதனை இலக்கத்தில் எழுதினால் வருவது,
1) 123 2) 133 3) 143 4) 153

38) **247** இதனை எழுத்தில் எழுதினால் வருவது,
1) இருநூற்று முப்பத்தேழு
2) இருநூற்று நாற்பத்தேழு
3) இருநூற்று ஐம்பத்தேழு
4) இருநூற்று அறுபத்தேழு

39) கீழ்வரும் வரிசையில் **ஆகக்கூடிய எண்** யாது?
1) இருநூற்று ஐம்பது
2) இருநூற்று நாற்பது
3) இருநூற்று முப்பது
4) இருநூற்று இருபது

40) கீழ்வரும் வரிசையில் **410** இதனை விடவும் **குறைந்த எண்** யாது?
1) நானூற்று இருபது
2) நானூற்று பதினைந்து
3) நானூற்று பத்து
4) நானூற்று ஐந்து

* * * * *

සියලුම හිමිකම් ඇවිරිණි/ முழுப் பதிப்புரிமையுடையது / All Rights reserved

මධ්‍යම පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
மத்திய மாகாண கல்வித் திணைக்களம்
Department of Education Central Province

ஆண்டிறுதிப் பரீட்சை - 2019

| 65 | T | II |
|---|---|---|

தரம் : 10
10 ශ්‍රේණිය

இரண்டாம் மொழி - தமிழ் I, II
දෙවන බස - දෙමළ I, II

# (65) இரண்டாம் மொழி - தமிழ்
## வினாத்தாள் II

**கவனிக்க :**
- **பகுதி** I இலுள்ள **இரண்டு** வினாக்களுக்கும் **பகுதி** II இல் இருந்து **ஏதேனும் ஒரு** வினாவுக்கும் **பகுதி** III இலுள்ள **இரண்டு** வினாக்களுக்குமாக **மொத்தம் ஐந்து** வினாக்களுக்கு **மாத்திரம்** விடை எழுதுக.

සැලකිය යුතුයි :
- I කොටසෙහ් ප්‍රශ්න දෙකටත්, II කොටසේ එක් ප්‍රශ්නයකටත්, III කොටසෙහි ප්‍රශ්න දෙකටත් වශයෙන් ප්‍රශ්න පහකට පමණක් පිළිතුරු සපයන්න.

**Note :**
- Answer **only five** questions including the **two** questions in **Part I** and selecting **one** question from **Part II** and **two** questions in **Part III**.

### பகுதி I

01) பின்வரும் தலைப்புக்களில் **ஒன்றைத்** தெரிவுசெய்து தரப்பட்ட விடயங்களை உள்ளடக்கி ஏறத்தாழ **100 சொற்களில்** அமையுமாறு **கட்டுரை** ஒன்று எழுதுக.
දෙන ලද තොරතුරුවලට අනුව පහත මාතෘකාවලින් එකක් පිළිබඳ වචන 100 ක පමණ රචනයක් ලියන්න.
Write an **essay** in about **100 words** on **any one** of the following topics according to the given information.

அ. உடைந்த தண்ணீர் போத்தலின் சுயசரிதை
1) தண்ணீர் போத்தலின் இன்றைய நிலை
2) தண்ணீர் போத்தலின் உருவாக்கம்
3) தண்ணீர் போத்தலின் மூலம் பெற்றுக்கொண்ட பயன்கள்
4) இன்றைய நிலைக்கான காரணம்

ஆ. இரண்டாம் மொழியைக் கற்போம்!
1) மொழியின் முக்கியத்துவம்
2) இரண்டாம் மொழி பற்றிய அறிமுகம்
3) இரண்டாம் மொழியின் பயன்கள்
4) இரண்டாம் மொழி கற்பதற்கான வழிகள்

இ. சுற்றுலாவில் நான் இரசித்த இடங்கள்.
1) சுற்றுலா ஏற்பாடுகள்
2) சுற்றுலாவின் போது இரசித்த இடங்கள்
3) இரசித்த இடங்களிலுள்ள சிறப்பம்சங்கள்
4) சுற்றுலாவில் மறக்கமுடியாதவைகள்

ஈ. சித்திரைப் புத்தாண்டு
1) சித்திரை மாதப் பிறப்பின் ஆரம்ப நிகழ்வுகள்
2) சித்திரைப் புத்தாண்டு சம்பிரதாயங்கள்
3) சித்திரைப் புத்தாண்டு விளையாட்டுக்கள்
4) சித்திரைப் புத்தாண்டு உணர்த்தும் பாடம்

(20 புள்ளிகள்)

02) பின்வரும் படத்தை அடிப்படையாகக் கொண்டு **ஐந்து கருத்துள்ள வாக்கியங்கள்** எழுதுக. ஒரு வாக்கியத்தில் குறைந்தது நான்கு சொற்களுக்கு குறையாமல் இருத்தல் வேண்டும்.
පහත සඳහන් පින්තූරය පදනම් කර ගනිමින් **අර්ථවත් වාක්‍ය පහක්** ලියන්න. එක් එක් වාක්‍යයට, වචන හතරකට නොඅඩුව තිබිය යුතු ය.
Write **five meaningful sentences** based on the picture given below. Each sentence should contain at least four words.




(10 புள்ளிகள்)

✷ **3, 4** ஆம் வினாக்களுள் ஏதேனும் **ஒன்றுக்கு மாத்திரம்** விடை எழுதுக.
3 සහ 4 ප්‍රශ්නවලින් **එකකට පමණක්** පිළිතුරු ලියන්න.
Answer **only one** question from 3 and 4.

03) பின்வரும் பாடலை வாசித்து அதன்கீழ் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு **பூரணமான வாக்கியங்களில்** விடை எழுதுக.
පහත කවි පෙළ කියවා, අසා ඇති ප්‍රශ්නවලට **සම්පූර්ණ වාක්‍යවලින්** පිළිතුරු සපයන්න.
Read the following poem and answer the questions given below in **complete sentences.**

அம்மா, அம்மா வருவாயே
அன்பாய் முத்தம் தருவாயே
அம்மா உன்னைக் கண்டாலே
அழுகை ஓடிப் போய் விடுமே!

பத்து மாதம் சுமந்தாயே
பாரில் என்னைப் பெற்றாயே
பத்தி யங்கள் காத்தாயே
பாடு பட்டு வளர்த்தாயே!

1) பாடுபட்டு வளர்த்தவர் யார்?

2) அம்மா அன்பாகத் தருவது என்ன?

3) இங்கு குறிப்பிடப்பட்டுள்ள மாதங்கள் எத்தனை?

4) அழுகை ஓடிப் போய்விடுவது ஏன்?

5) அம்மா என்ற சொல்லை ஆண்பாலாக மாற்றி வாக்கியம் ஒன்று எழுதுக.

(10 புள்ளிகள்)

04) பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன்கீழ் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு **பூரணமான வாக்கியத்தில்** விடை எழுதுக.
පහත දැක්වෙන ඡේදය කියවා, අසා ඇති ප්‍රශ්නවලට **සම්පූර්ණ වාක්‍යවලින්** පිළිතුරු ලියන්න.
Read the following passage and answer the questions given below in **complete sentences.**

> தமிழுக்கும் சைவத்திற்கும் தொண்டுகள் ஆற்றிய அறிஞர்கள் பலர். அவர்களில் ஆறுமுக நாவலரும் ஒருவர். இவர் இலங்கையிலும் இந்தியாவிலும் பெரிதும் மதிக்கப்பட்டவர்.
>
> இவர் யாழ்ப்பாணத்தின் நல்லூரில் பிறந்தார். இவரது தந்தை கந்தப்பிள்ளை, தாய் சிவகாமி அம்மையார். இளமையிலேயே தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளைக் கற்றார். தமிழ் இலக்கண இலக்கியங்களையும் கற்றார். சமய இலக்கியங்களையும் கற்று உணர்ந்தார்.

1) இலங்கையிலும் இந்தியாவிலும் பெரிதும் மதிக்கப்பட்டவர் யார்?
2) ஆறுமுக நாவலர் எங்கு பிறந்தார்?
3) சிவகாமி அம்மையார் யார்?
4) ஆறுமுக நாவலர் கற்ற இலக்கியங்கள் எவை?
5) இங்கு குறிப்பிடப்பட்டுள்ள மொழிகள் எவை? (10 புள்ளிகள்)

## பகுதி III

✷ **5, 6** ஆம் வினாக்களுக்கு விடை எழுதுக. / 5 සහ 6 ප්‍රශ්නවලට පිළිතුරු ලියන්න.
Write answer to the questions **5** and **6**.

05) உமது கிராமத்துக்கு வீதி விளக்குகளைப் பொருத்தித் தருமாறு கேட்டு பிரதேச சபைத் தலைவருக்கு ஒரு கடிதம் எழுதுக.
ඔබේ ගමට වීදි ලාම්පු සවිකර දෙන ලෙස ඉල්ලා ප්‍රාදේශීය සභා සභාපතිට ලිපියක් ලියන්න.

**அல்லது**

“வீதி விபத்துக்களைத் தவிர்ப்போம்!” எனம் தலைப்பில் சுவரொட்டி ஒன்றைத் தயாரிக்குக.
“මාර්ග අනතුරු වලක්වමු!”යනු මාතෘකාවෙන් පෝස්ටරයක් නිර්මාණය කරන්න.

06) பின்வரும் சிங்கள வாக்கியங்களை **அல்லது** ஆங்கில வாக்கியங்களை **தமிழில்** மொழிபெயர்க்குக.
පහත දැක්වෙන සිංහල වාක්‍ය **හෝ** ඉංග්‍රීසි වාක්‍ය දෙමළ භාෂාවට පරිවර්තනය කරන්න.
Translate the following Sinhala sentences **or** English sentences into **Tamil.**

1) මේ අපේ නගරයයි?
2) මුරුංගා මිළ කීය ද?
3) ඔබ කැමති පළතුරු කුමක් ද?
4) කරුණාකර පොත දෙන්න.
5) අපි නැවත හමුවෙමු.

1) This is our town.
2) How much is Drumstick?
3) What is the fruit do you like?
4) Please give the book.
5) We will meet again.

**அல்லது**

போட்டியொன்று பற்றி தெரிந்து கொள்வதற்காக இடம்பெற்ற தொலைபேசி உரையாடல் ஒன்றை 50 சொற்களில் எழுதுக.
තරගයක් සම්බන්ධව දැනගැනීම පිණිස පැවැත්වූ දුරකථන සාකච්ඡාවක් දෙබසක ආකාරයෙන් වචන 50 ක පමණ ඇතුළත් වන සේ ලියන්න.

(10 புள்ளிகள்)

* * * * *

**ஆண்டிறுதிப் பரீட்சை - 2019**
**இரண்டாம் மொழி (தமிழ்) (65) - தரம் 10**
**விடைப்பத்திரம் - පිළිතුරු පත්‍රය**

**பத்திரம் I**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 11 | 2 | 21 | 3 | 31 | 4 |
| 2 | 4 | 12 | 3 | 22 | 2 | 32 | 1 |
| 3 | 1 | 13 | 2 | 23 | 3 | 33 | 3 |
| 4 | 3 | 14 | 1 | 24 | 1 | 34 | 1 |
| 5 | 1 | 15 | 3 | 25 | 4 | 35 | 2 |
| 6 | 3 | 16 | 4 | 26 | 3 | 36 | 4 |
| 7 | 4 | 17 | 4 | 27 | 3 | 37 | 3 |
| 8 | 2 | 18 | 1 | 28 | 1 | 38 | 2 |
| 9 | 1 | 19 | 2 | 29 | 2 | 39 | 1 |
| 10 | 4 | 20 | 2 | 30 | 4 | 40 | 4 |

(1x40=40 புள்ளிகள்)

**பத்திரம் II**
**பகுதி I**

01) அ. உடைந்த தண்ணீர் போத்தலின் சுயசரிதை
1) தண்ணீர் போத்தலின் இன்றைய நிலை
- தேவையற்ற நிலையில் காணப்படுதல்.
- ஓரத்தில் ஒதுக்கி வைக்கப்பட்டிருத்தல்.
- பரிதாப நிலையில் இருத்தல்.

2) தண்ணீர் போத்தலின் உருவாக்கம்
- தயாரிக்கப்பட்ட இடம்/ நிறுவனம்
- பயன்படுத்தப்பட்ட மூலப்பொருட்கள்
- அலங்காரப்படுத்தல் / பொதியிடல்

3) தண்ணீர் போத்தலின் மூலம் பெற்றுக்கொண்ட பயன்கள்
- பயன்படுத்தியவர்கள் / இடங்கள்
- உதவிய இடங்கள் : பாடசாலையில் / விளையாட்டு / மேலதிக வகுப்புக்கள் / நண்பர்களுக்கு தண்ணீர் கொடுக்கப்பட்டது முதலானவை.

4) இன்றைய நிலைக்கான காரணம்
- பாவிக்கப்படாமைக்கான பிரதான காரணிகள் (சேதப்பட்டிருத்தல் / வெடித்திருத்தல் / பொசுங்கிய நிலையில் காணப்படல்)

ஆ. இரண்டாம் மொழியைக் கற்போம்!
1) மொழியின் முக்கியத்துவம்
- சிறந்த தொடர்பாடலுக்கு அவசியம்
- கருத்துக்களை , உணர்வுகளை வெளிப்படுத்த மொழியின் அவசியம்

2) இரண்டாம் மொழி பற்றிய அறிமுகம்
- சிங்களமும் தமிழும் அரச கரும மொழி என்பதை விபரித்தல்.
- தமிழருக்கு சிங்களம், சிங்களவருக்கு தமிழ் இரண்டாம் மொழி என்பதனை விபரித்தல்.

3) இரண்டாம் மொழியின் பயன்கள்
- தேசிய ஒருமைப்பாட்டை ஏற்படுத்தல்.
- இனங்களுக்கிடையில் புரிந்துணர்வை வளர்த்தல்.
- நாட்டின் அபிவிருத்திக்கு உதவுதல்.

4) இரண்டாம் மொழி கற்பதற்கான வழிகள்
- பாடசாலை மட்டத்தில்
- ஊடகங்கள் மூலம் (வானொலி / பத்திரிக்கை)
- உறவினர், நண்பர்களுடன் உரையாடுதல் மூலம்

இ. சுற்றுலாவில் நான் இரசித்த இடங்கள்.

1) சுற்றுலா ஏற்பாடுகள்
   - சுற்றுலா ஏற்பாடுகள் : யாரால் / எப்படி / எங்கு முதலான தகவல்களைக் குறிப்பிடுதல்.
   - முன்னேற்பாடுகள் பற்றிச் சுருக்கமாக எழுதுதல்.
2) சுற்றுலாவின் போது இரசித்த இடங்கள்
   - மத வழிபாட்டுத் தலங்கள்
   - நீர் வீழ்ச்சிகள் / ஆறுகள் / குளங்கள்
   - கட்டடங்கள் / சுற்றுலாத் தலங்கள்
3) இரசித்த இடங்களிலுள்ள சிறப்பம்சங்கள்
   - மன்னர் கால கட்டடங்கள்
   - சரித்திர முக்கியத்துவம் வாய்ந்தவை
   - வரலாற்றுக் கதைகளுடன் தொடர்புபட்டவை முதலான தகவல்கள்
4) சுற்றுலாவில் மறக்கமுடியாதவைகள்
   - மிக உயர்ந்த இடங்களில் ஏறிய முதல் அனுபவம் முதலானவை
   - வித்தியாசமான / எதிர்பாராத நிகழ்வுகள் பற்றிக் குறிப்பிடுதல்.

ஈ. சித்திரைப் புத்தாண்டு

1) சித்திரை மாதப்பிறப்பின் ஆரம்ப நிகழ்வுகள்
   - மரம், செடி, கொடிகளில் பூக்கள் பூக்கத் தொடங்குதல்.
   - குயில்கள்இனிமையாகக் கூவுதல்.
2) சித்திரைப் புத்தாண்டு சம்பிரதாயங்கள்
   - எல்லா விடயங்களிலும் நேரம் பார்த்தல்.
   - இந்துக்கள் மருத்து நீர் தேய்த்தல்.
   - பௌத்தர்கள் சுபநேரத்தில் எண்ணெய் தேய்த்தல்.
     புத்தாடை / பெரியோரின் ஆசி / கடவுள் வணக்கம் முதலானவை.
3) சித்திரைப் புத்தாண்டு விளையாட்டுக்கள்
   - ஊஞ்சல் ஆட்டல் முதலானவை.
   - மைதான விளையாட்டுக்கள் : தலையணைச் சண்டை / தேங்காய் துருவுதல் / முட்டி உடைத்தல் / யானைக்கு கண் வைத்தல் முதலானவை
4) சித்திரைப் புத்தாண்டு உணர்த்தும் பாடம்
   - ஒற்றுமையாக வாழும் பண்பு
   - தோழமையுடன் நிகழ்ச்சிகள் ஒழுங்குபடுத்தும் வாய்ப்பு.
   - பழைய சம்பிரதாயங்களுக்கு மதிப்பளித்தல்.

**(20 புள்ளிகள்)**

02)
- படத்தை அடிப்படையாகக் கொண்டு கருத்துள்ள வாக்கியங்கள் ஐந்து எழுதுதல்.
- ஒவ்வொரு வாக்கியத்திலும் ஆகக் குறைந்தது நான்கு சொற்களேனும் இருத்தல் வேண்டும்.

1) இது ஒரு அழகிய படம் ஆகும் / இது ஒரு அலுவலகம் ஆகும் / இது ஒரு கிராம உத்தியோகத்தர் அலுவலகம் ஆகும்.
2) இங்கே மூவர் / மூன்று பேர் அமர்ந்து / உட்கார்ந்து உள்ளனர்.
3) இதில் / இந்தப்படத்தில் ஒருவர் மூக்குக் கண்ணாடி / அணிந்து இருக்கிறார்/ அணிந்தவர் ஆவார்.
4) கிராம உத்தியோகத்தருக்கு / ஒருவர் / ஏதோ / கடிதம் ஒன்றை / நீட்டுகிறார் /கொடுக்கிறார்.
5) சுவரில் ஒரு / அழகான / படம் / உள்ளது. / இருக்கின்றது / தெரிகிறது / காணப்படுகின்றது.

- இவை போன்ற படத்திற்குப் பொருத்தமான வாக்கியங்களைக் கவனித்துப் புள்ளி வழங்குக.

☛ முழுமையான வழுவற்ற வாக்கியம் 02 புள்ளிகள்
☛ எழுத்துப்பிழையின்றி இருப்பின் 01 புள்ளி

**(2 x 5 = 10 புள்ளிகள்)**

## பகுதி II

03) 1) பாடுபட்டு வளர்த்தவர் அம்மா ஆவார் / அம்மா எம்மை பாடுபட்டு வளர்த்தார்.
2) அம்மா அன்பாகத் தருவது முத்தம் ஆகும் / அம்மா அன்பாக முத்தம் தருவார் / அம்மா அன்பாய் முத்தம் தருவார்.
3) இங்கு குறிப்பிடப்பட்டுள்ள மாதங்களின் எண்ணிக்கை பத்து ஆகும் / இங்கு குறிப்பிடப்பட்டுள்ள மாதங்கள் பத்து ஆகும்.
4) அம்மாவைக் கண்டால் / கண்டாலே அழுகை ஓடிப்போய்விடும். / அம்மாவைக் கண்டதாலேயே அழுகை ஓடிப்போய் விடும்.
5) அப்பா புத்தகம் வாங்கித் தருவார் / அப்பா எனக்கு உதவி செய்வார்.
(பொருத்தமான பூரண வாக்கியமாக எழுத வேண்டும்)

☛ முழுமையான வழுவற்ற வாக்கியம் 02 புள்ளிகள்
☛ எழுத்துப்பிழையின்றி தனிச்சொற்களில் விடையிருப்பின் 01 புள்ளி

**(2 x 5 = 10 புள்ளிகள்)**

04) 1) ஆறுமுக நாவலர் இலங்கையிலும் இந்தியாவிலும் பெரிதும் மதிக்கப்பட்டவர் ஆவார். / இலங்கையிலும் இந்தியாவிலும் பெரிதும் மதிக்கப்பட்டவர் ஆறுமுக நாவலர் ஆவார்.
2) ஆறுமுக நாவலர் யாழ்ப்பாணத்தின் நல்லூரில் பிறந்தார். / யாழ்ப்பாணத்தின் நல்லூரிலே ஆறுமுக நாவலர் பிறந்தார்.
3) சிவகாமி அம்மையார் என்பவர் ஆறுமுக நாவலரின் தாயார் ஆகும். / ஆறுமுக நாவலரின் தாயார் சிவகாமி அம்மையார் ஆகும்.
4) ஆறுமுக நாவலர் தமிழ் இலக்கியங்களையும் சமய இலக்கியங்களையும் கற்றார் / தமிழ் இலக்கியங்களையும் சமய இலக்கியங்களையும் ஆறுமுக நாவலர் கற்றார்.
5) இங்கு குறிப்பிடப்பட்டுள்ள மொழிகளாவன : தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம் என்பவைகளாகும். / தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளே இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது.

☛ முழுமையான வழுவற்ற வாக்கியம் 02 புள்ளிகள்
☛ தனிச்சொற்களில் எழுத்துப்பிழையின்றி விடையிருப்பின் 01 புள்ளி

**(2 x 5 = 10 புள்ளிகள்)**

## பகுதி III

05) **கடிதம் எழுதுதல்**

- அமைப்பு
  1. முகவரி 2. உள்முகவரி 3. விளிப்பு 4. தலைப்பு 5. முடிப்பு, ஒப்பம் ......... 03
- உள்ளடக்கம்
  1. வீதி விளக்கின் அவசியம் பற்றி குறிப்பிடுதல். 2. அவசியப்படும் இடம்பற்றி குறிப்பிடுதல். 3. வேண்டுகோள் விடுத்தல். ......... 04
- மொழிநடை
  1. கருத்துத் தெளிவு 2. வழுக்களின்மை 3. எளிய நடை ......... 03

**(10 புள்ளிகள்)**

**சுவரொட்டி தயாரித்தல்**

- அமைப்பு
  1. தலைப்பு 2. விளிப்பு 3. வெளியிடும் அமைப்பு / நிறுவனம் ......... 03
- உள்ளடக்கம்
  1. வீதி விபத்துக்களின் அதிகரிப்பு தொடர்பான தகவல்கள்
  2. விபத்துக்களினால் ஏற்படும் விபரீதங்கள்
  3. தடுக்கும் நடவடிக்கைகள்
  பொருத்தமான , கவர்ச்சிகரமான வசன நடை இடம்பெறலாம். ......... 04
- மொழிநடை
  1. எளிய மொழிநடை 2. சிந்திக்கத் தூண்டும் வசனங்கள் 3. தெளிவு
  4. எழுத்துப் பிழையின்றி / வழுக்களின்றி இருத்தல். ......... 03

**(10 புள்ளிகள்)**

06) **மொழி பெயர்ப்பு**

1) இது எங்கள் நகரமாகும் / இது எமது நகரமாகும்.
2) முருங்கைக்காய் என்ன விலை? / முருங்கையின் விலை என்ன?
3) உங்களுக்கு விருப்பமான பழம் எது? / நீங்கள் விரும்பும் பழம் எது?
4) தயவு செய்து புத்தகம் தாருங்கள் / தயவு செய்து புத்தகத்தைத் தாருங்கள்.
5) நாம் மீண்டும் சந்திப்போம் / நாங்கள் மீண்டும் சந்திப்போம்.

☛ முழுமையான வழுவற்ற வாக்கியம் 02 புள்ளி
☛ வழுக்களுள்ள வாக்கியமாயின் 01 புள்ளி

**(10 புள்ளிகள்)**

**அல்லது**

**உரையாடல்**

| | | |
|---|---|---|
| அமைப்பு | ☛ உரையாடல் நடையில் எழுதல் | 03 புள்ளி |
| உள்ளடக்கம் | ☛ தலைப்புக்குப் பொருத்தமானதாக இருத்தல் | 04 புள்ளி |
| மொழிநடை | ☛ பேச்சுமொழி<br>☛ கருத்துத்தெளிவு<br>☛ வழுக்கள் இல்லாமை | 03 புள்ளி |

**(10 புள்ளிகள்)**

* * * * * *